
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2056, - ஜூலை 19, 2025

Weekly E-paper • July 19, 2025

# உலகெங்கும் உயரும் பெரியார் !

சுப. வீரபாண்டியன்

## இயக்கச் செய்திகள்

## சுந்தரா டிராவல்ஸ்

தலையங்கம்

## கீழடியும் - சரஸ்வதியும்!

எழில்.இளங்கோவன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - ஜூலை 19, 2025 Weekly E-paper ● July 19, 2025



## உலகெங்கும் உயரும் பெரியார் !

சுப. வீரபாண்டியன்

கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு, எங்களின் பிள்ளைகளை, பேரப் பிள்ளைகளைப் பார்ப்பதற்காகவும், அவர்களோடு தங்கி மகிழ்வதற்காகவும்தான் நானும், என் துணைவியாரும் இங்கு வந்தோம்!

இங்கு வந்த பிறகுதான், உலகெங்கும் நம் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்தோம்! அத்தனை அன்பு, பாசம், மகிழ்ச்சியோடு ஒவ்வொரு இடத்திலும் நம் உணர்வாளர்கள் எங்களை வரவேற்றனர்!

நான் உரையாற்றுவதற்காகச் சென்ற எந்த ஊரிலும், விடுதிகளில் தங்காமல், நம் தோழர்களின் வீடுகளில்தான் தங்கினோம். அவர்கள் தோழர்களாக மட்டுமில்லாமல், எங்கள் பிள்ளைகளாகவும் இருந்து எங்களைப் பார்த்துக் கொண்டனர்!



இத்தகைய தனிப்பட்ட உறவு பலருக்கும் கிடைக்கலாம்! ஆனால், பெரியாரின் மீதும், திராவிடக் கருத்தியலின் மீதும் பேரன்பு கொண்டிருக்கும் அந்தத் தோழர்களின் கொள்கைஉறவு எல்லோருக்கும் கிடைத்துவிடாது!

சிலஊர்களில்நடைபெற்றகலந்துரையாடல்கள், இரவு 12 மணியையும் தாண்டித் தொடர்ந்தது ! பெண்கள், ஆண்கள், குழந்தைகள் என்று எல்லோரும் சுற்றி அமர்ந்து பெரியாரின் சிந்தனைகளைப் பெரு மகிழ்வோடு பெற்றுக் கொண்டனர்!

ஓர் ஊரில், பெரியாரே ஒரு மண் என்று அற்பர்கள் சிலர் பேசுகின்றனரே என்று கேட்டுக் கோபப்பட்டார்கள். "ஆம், பெரியார் ஒரு மண்தான்! நாட்டிற்குத் தேவையான நல்ல நல்ல மூலிகைகளை விளைத்துத் தந்த மண் ! ஏச்சுகளையும், பேச்சுகளையும் தனக்கு உரமாக்கிக் கொண்டு நல்ல மரங்களை நாட்டிற்குத் தந்த மண்" என்று குறிப்பிட்டேன்.

"நான் கையொப்பம் இட்டுக் கொடுத்தால், வெளிநாடுகளில் விசா தருகிறார்கள், குடியுரிமை கூடத் தருகிறார்கள் என்று சில தற்குறிகள் பேசுவதைத்தமிழ்நாட்டு மக்கள் எப்படி தாங்கிக்கொள்கின்றனர்"என்று கேட்டு ஒரு கூட்டத்தில் தோழர்கள் சிரித்தனர் ! விசா வாங்குவது, குடியுரிமை வாங்குவது எல்லாம் நடைமுறையில் எவ்வளவு கடினமானவை என்பதை அவர்கள்தானே அறிவார்கள்!

அமெரிக்காவின் ஒரு மாநிலத்தில், அந்த அற்பர்களின் ஆதரவாளர்கள் சிலர், போராட்டக் களத்தில் நின்ற ஓர் அம்மையாரை அழைத்து வந்து கூட்டம் நடத்தி இருக்கிறார்கள். பெரியாரை எதிர்த்து அவர் பேசுவார் என்று நினைத்திருக்கிறார்கள். ஆனால் அவரோ, இத்தனை ஆண்டுகள் களத்தில் நின்று போராடும் துணிவை எனக்குத் தந்தவர் பெரியார்தான் என்று பேசியிருக்கிறார். அழைத்து வந்தவர்களின் முகங்களில் கருப்புக் கொடியின் சாயம் படர்ந்திருக்கிறது!

திராவிடர் கழகத் தலைவர், ஆசிரியர், அய்யா வீரமணி அவர்கள் சொல்வது போல், பெரியார் உலகமயமாகி இருக்கிறார்! உலகம் பெரியார் மயமாகிக் கொண்டிருக்கிறது!

இன்னும் சில நாள்களில், மகிழ்ச்சியோடு தாயகம் திரும்புகிறோம்! ●

### மு.க.முத்து காலமானார்



தலைவர் கலைஞரின் மூத்தமகன் மு.க.முத்து அவர்கள் வயதுமுதிர்வினால் இன்று சென்னையில் காலமானார். அவருக்கு எங்களின் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

-திராவிட இயக்கத் தமிழர் பேரவை

# சிகாகோவில் பேரவைத் தலைவர்





அமெரிக்கா (வடக்கு) தி.மு.க அயலக அணி, அமெரிக்கா பெரியார் பன்னாட்டமைப்பு, அமெரிக்கா பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம் இணைந்து நடத்திய "திராவிடக் கருத்தரங்கம் சிகாகோ 2025" என்ற கருத்தரங்கம், 13-07-2025 அன்று அமெரிக்கா, சிகாகோ நகரில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர், பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் "திராவிட இயக்கமும் தமிழ்ச் சமூகமும்" என்ற தலைப்பில் உரையாற்றினார். தி.மு.க கல்வியாளர் அணித் தலைவர் செந்தலை ந.கவுதமன் அவர்கள் "திராவிட மாடல் தொடக்கமும், எதிர்காலமும்" என்ற தலைப்பிலும், தி.மு.க சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் பழ.செல்வகுமார் "தமிழ்நாட்டு மகளிரும், திராவிட மாடல் ஆட்சியும்" ஆகிய தலைப்புகளில் உரையாற்றினர்.

# பேரவையின் தென்மண்டலக் கூட்டம்




பேரவையின் தெற்கு மண்டல கலந்தாய்வுக் கூட்டம் 13.07.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை மதுரை பெரியார் மையத்தில் பொதுச் செயலாளர் தோழர் சிற்பி செல்வராஜ் தலைமையில் துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் இராம.வைரமுத்து முன்னிலையில் நடைபெற்றது. 'தலைவர் கலைஞர் நினைவு நாளான 07.08.2025 முதல் பேரறிஞர் அண்ணா நினைவு நாளான 03.02.2026 வரையிலான ஆறு மாத காலத்திற்குள் "ஏன் தொடர வேண்டும் திராவிட மாடல் ஆட்சி" என்ற தலைப்பில் 234 தொகுதிகளிலும் தெருமுனை கூட்டங்கள் நடத்துவது என்ற தீர்மானத்தை மதுரைப் பொதுக்குழு நிறைவேற்ற வேண்டும் என்ற கருத்துரு முன்வைக்கப்பட்டது. அனைத்து மாவட்டங்களிலும் இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம் மற்றும் திராவிட முழக்கம் வாசகர் வட்டம் தொடங்கி மாதம்தோறும் கூட்டம் நடத்துவது, உறுப்பினர் சேர்த்தல் மற்றும் புதுப்பித்தல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. 2024 - 2025 ஆண்டின் செயல்பாடுகளையும், 2025 - 2026 ஆண்டுக்கான செயல்திட்டங்களையும் மாவட்டச் செயலாளர்கள் விளக்கினர். நிகழ்வில் அறிவுரைஞர் குழு உறுப்பினர் புலவர் ஜெயபால் சண்முகம், இளைஞரணிச் செயலாளர் சந்தானம், கொள்கை பரப்புச் செயலாளர் வேடசந்தூர் ரவி, 'திராவிட முழக்கம்' பொறுப்பாசிரியர் குமரன்தாஸ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் தோழர்கள் பங்கேற்றனர். மதுரை மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் பி.அமர்நாத் வரவேற்றார். மதுரை மாவட்டத் தலைவர் மருத்துவர் சந்திரன் நன்றி கூறினார்.

– இராம.வைரமுத்து,
துணைப் பொதுச்செயலாளர் (தெற்கு மண்டலம்)

# கீழடியும் - சரஸ்வதியும்!

எழில்.இளங்கோவன்



கீழடியை சரஸ்வதியோடு ஒப்பிட முடியாது. கீழடி என்பது வரலாறு, சரஸ்வதி என்பது ஒரு கற்பனை. முதலில் சரஸ்வதியைப் பார்போம், பின்னர் கீழடிக்கு வருவோம்.

சரஸ்வதி நதி எங்கே இருக்கிறது, எங்கே ஓடுகிறது என்பதற்கு இதுவரை தெளிவான விளக்கம் இல்லை. சரஸ்வதி நதி நதிகளின் தாய் என்றும், அது ஒரு புண்ணிய நதி என்றும் ரிக்வேதம் சொல்கிறதாம். இது ஒன்றிய அரசு கேட்கும் 'விஞ்ஞானப்பூர்வ ஆதாரமா?' என்றால் இல்லவே இல்லை, தொகுப்புதான்.

அலகாபாத் பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரியர் அனாமிகா, " புராணங்களின் கூற்றுப்படி சரஸ்வதி நதி பிரம்மாவின் மகளாக அறியப்படுகிறார். சரஸ்வதி, கௌஷாம்பி பேரரசர் புருரவா மீது காதல் கொண்டதாக புராணங்களில் உள்ளது. சரஸ்வதியின் காதலை அறிந்த பிரம்மா கோபத்தில் மறைந்து போகுமாறு சாபம் விடுத்ததாகப் புராணத்தில் கூறப்படுகிறது என்று அறியப் படுவடுவதாகவும், கூறப்படுவதாகவும் சொல்கிறார். மதுராவைச் சேர்ந்த பேராசிரியர் தனஞ்செயதாஸ் ஒரு கதை சொல்கிறார். "பத்ரிநாத் என்ற இடத்திலிருந்து சரஸ்வதிநதி உருவானதாகக் கூறப்படுகிறது. சரஸ்வதி நதிநீர் ஓடும்போது எழும் சத்தத்தால் முனிவர் ஒருவரின் தவம் கலைந்து விட்டதால் அவர் கொடுத்த சாபத்தில் சரஸ்வதி நதி அழிந்து போனதாகக் கதைகள் உள்ளன என்று அவரும் ஒரு கதையைச் சொல்கிறார்." வடமொழியில் புலமை பெற்ற கவிஞர் காளிதாசர் தான்எழுதிய ரகுவம்சத்தில் சிந்து, கங்கை நதிகளைச் சொல்லும்போது ஏன் சரஸ்வதியைக் குறிப்பிடவில்லை என்ற கேள்வி எழுகிறது. சரி! இந்த நதி எங்கே இருக்கிறது?

இமாச்சப் பிரதேசம் தொடங்கி பஞ்சாப், அரியானா, ராஜஸ்தான் வழியாக குஜராத்துக்குள் நுழைந்து அரபிக்கடலில் கலந்து விடுகிறதாம். இந்திய ஒன்றியத்தின் அனைத்து நதிகளும் வங்கக்கடலில் கலக்கும்போது, சரஸ்வதி மட்டும் குஜராத்தில் உள்ள ரானாப்கட்ச் என்ற இடத்தில் அரபிக்கடலில் கலப்பது என்று சொல்வது வியப்பாக இருக்கிறது.

ராஜஸ்தானின் மூத்த நிலத்தடி நீர் விஞ்ஞானி டாக்டர் நாராயணதாஸ் இன்கையா தலைமையிலான குழுவினர், "ராஜஸ்தானின் ஜெய்சல்மர் என்ற இடத்தில் 850 அடி வரை தோண்டியபோது பாறைகள் உடைந்து நீர் ஊற்று வெடித்தது. இவை களிமண் பாறைகள் என்பதால் அதன் அடுக்கு மிகவும் வலுவானது. அந்த அடுக்கு உடைந்த போதுதான் தண்ணீர் இவ்வளவு ஆற்றலுடன் அதிவேகமாக வெளியேறியுள்ளது" என்று கூறினார் அவர்.

அதேசமயம் முன்னாள் இஸ்ரோ விஞ்ஞானியும்,

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## சுந்தரா டிராவல்ஸ்

மக்களைச் சந்திக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு ஒரு வண்டியில் ஊர்வலம் போய்க்கொண்டு இருக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி. அவருடைய ஆட்சிகாலத்தில், 'அண்ணா அடிக்காதிங்க.. அண்ணா' என்று கதறிய பெண்களின் பொள்ளாச்சிச் சம்பவம், தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகப் போராடிய மக்கள் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்வை டி.வி. பார்த்துத்தான் தெரிந்துகொண்டேன் என்று சொன்ன அன்றைய முதலமைச்சர் இன்று எந்த முகத்தோடு மக்களைச் சந்திக்கிறேன் என்று போகிறார்?

போகின்ற இடமெல்லாம் பேசுவது பொய், தனிமனித விமர்சனம், திமுக அரசின் மக்கள்நலத் திட்டங்களுக்கு எதிராகப் பேசுவது. இதுதான் அவரின் அரசியல் நாகரிகமாக இருக்கிறது.

அதிமுக கூட்டணி கண்டு பயப்படுகிறாராம் ஸ்டாலின், சொல்கிறார் அவர். அதிமுக கூட்டணி என்றால் எடப்பாடியும், தமிழகத்தில் 'போணி' ஆகாத பாஜகவும்தான். இது ஒரு கூட்டணியாம். இரண்டும் தமிழர் விரோதக் கட்சிகள்.

இந்த நிலையில் அவரின் 'இருகட்சி'க் கூட்டணிக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியையும், கம்யூனிஸ்ட் கட்சியையும் சிவப்புக் கம்பளம் விரித்து அழைக்கிறாராம்.

இடதுசாரி சிந்தனையாளர்கள் கடைந்தெடுத்த வலது சாரிகளுடன் போக மாட்டார்கள் என்ற அடிப்படை அரசியல் கூடத் தெரியவில்லை, எடப்பாடிக்கு.

பாமக கூட்டணிக்கு வந்தால், அமித்ஷாவைப் போல ஆட்சியில் பங்கு கேட்பார்கள் என்ற பயமும் இருக்கிறது அவரிடம்.

நீங்க கூட்டணிக்கு வாங்க, நீங்க வாங்க...என்று ஏலச்சீட்டு நடத்துபவர் போல கூவிக் கொண்டு இருக்கும் எடப்பாடியைப் போல, எப்போதாவது, யாரையாவது அழைத்திருக்கிறாரா திமுக தலைவர் ஸ்டாலின் அவர்கள்?

அதிமுக மட்டுமே தனித்து ஆட்சி அமைக்கும், கூட்டணி ஆட்சி கிடையாது என்று முழக்கிக் கொண்டு இருக்கும் பழனிச்சாமிக்குத் தெரியும், 2026 தேர்தலில் அவர் கட்சி படுதோல்வி அடையப் போகிறது என்று.

தமிழ்நாட்டின் அடுத்த முதல்வரும் ஸ்டாலின்தான், என்பது மக்கள் எடுத்துள்ள முடிவு.

முதல்வர் சொல்கிறார் அது 'சுந்தரா டிராவல்ஸ்' வண்டி என்று. அதுகூட கொஞ்சம் ஓவர்தான், பழனிச்சாமிக்கு!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

சரஸ்வதி நதி குறித்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்த குழுவின் தலைவருமான டாக்டர் ஜே.ஆர். சர்மாவும் "ஜெய்சல்மரில் இப்போது வந்த தண்ணீர் சரஸ்வதி நதியில் இருந்து வந்ததா இல்லையா என்பது அந்த நீரை கார்பன்டேட்டிங் மூலம் காலக் கணடக்கிடல் செய்த பிறகுதான் தெரிய வரும்" என்று விவரித்தார்.

என்ன முயன்றாலும் சரஸ்வதி நதியைப் பற்றி ஒரு துப்பும் கிடைக்க வில்லையே என்று விழிபிதுங்கி இருக்கிறது ஒன்றிய அரசு. நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் சொல்வதுபோல், ராஜஸ்தானில் உள்ள ஐந்து இடங்களில் பத்து குழிகளைத் தேடி சரஸ்வதி நதியைக் கண்டுபிடித்து விட்டார்களாம்.

தமிழ்நாட்டின் கீழடி - "வைகைச் சமவெளியின் நாகரீகம்" என்பதை உறுதி செய்துகொண்டு இருக்கிறது. கொடுமணல், அழகன்குளம் ஆகிய இடங்களில் கிடைத்த எழுத்தின் மாதிரிகளை வைத்துஆய்வு செய்தபோது அந்தத் தமிழ் பிராமி எழுத்தின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டாகக் கருதப்பட்டது. ஆனால், இப்போது கீழடியில் ஒரு பானை ஓட்டில் இருந்த எழுத்துகளை வைத்து தமிழ் பிராமி கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே வழக்கத்தில் இருந்திருக்கிறது என்பதை அறியமுடிகிறது. கீழடியில் 102 குழிகள் தோண்டி, 88 கார்பன் மாதிரிகள், 5700 தொன்மைப் பொருள்களைக் கொண்டு ஆய்வு செய்த ஆய்வறிக்கையை இன்று ஏற்க மறுக்கலாம் மோடியின் ஒன்றிய அரசு. எப்போதும் மறுக்க முடியாது. எகிப்திய நாகரிகம், சுமேரிய நாகரிகம், நைல்நதி நாகரிகம் வரிசையில் நாளை வைகைச் சமவெளி நாகரிகத்தையும் உலகம் படிக்கப் போகிறது.

வரலாற்றுக் கீழடியும், சரஸ்வதி என்ற கற்பனை நதியும் திராவிட - ஆரியப் போரின் தொடர்ச்சிதான்!